உ

முருகன்றுணை.

மதிராஸ்

# தூக்குப் பாட்டு.



இவை சிறுமணவூர்

**முனிசாமி முதலியாரவர்களால்**

இயற்றியதை

---

தூத்துக்குடி

**வே. சி. சாமிதாசனால்**

தூத்துக்குடி
ஸ்டார் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1922. அணா 1

225529.

உ

கடவுள் துணை.

# மதிருஸ் தூக்குப்பாட்டு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மதிமோசம்பாரீர் பெண்ணாலேகுடிகெட்ட
விதிவசங்கேளீர்

அநுபல்லவி.

பதிவிரதைபோல்திரிம் புருஷனையேமாததி
சதிசெய்துபிள்ளையை க்ஷணத்தில்கொன்றுபோட்ட--மதி

சரணங்கள்-

கொண்டகணவனுக்கு ரெண்டகம்நினைதிட்டு
குடிகேடிபுருஷனை கிழமென்றுமதிப்பிட்டு
முன்தாரப்பிள்ளைமேல் மோகக்கவலைப்பட்டு
மோசமென்றறியாமல் ஆசையவன்மேல்வைத்து
கைபிடித்தாளாம் அவன்தாயாசசுதுயென்று
காலபிடித்தாளும் யென்னை

பெற்றதகப்பனுக்கு பின்தாரமாச்சுதே
பிள்ளையென்றெண்ணாமல் விபரீதம்நினைத்தாயே
பத்துமாதஞ்சுமந்து பால்தரவிட்டாலும்
பாதுகார்ப்பதற்கு மாதாவாய்வந்தாயே
மதியெங்கேபோச்சு — அடுக்காதிந்தபேச்சு
உலகத்துக்கேச்சு எனக்கு

தாயாகவந்துநீ தாரம்போல்மடக்குறாய்
தந்தையறிந்தாலென்ன நிந்தையாய்முடியுமோ
தெய்வந்தான்பொறுக்குமோ தேசத்துக்கடுக்குமோ
சிச்சியென்னைஇருமேல காட்டாதேமுகமென்றான்
பயந்தாப்போல் நின்றாள்—தெரியாதென்குற்றத்தை
பொறுத்துக்கொள்ளென்றாள் இவன்

சாஸ்திரந்தெரிந்தவன்போல் சட்டங்கள்பேசுறான்
சரிசரியிவனைநாம் வசவாமசககலா
யென்றுமனதில்வைத்து மெத்தவுத்தமிபோலும்
மேலுக்குஉபசாரம் நாளுக்குநாளாக
மனதையுங்கரைப்பாள் யிரும்புவருகும்படி
நினைவுகள்கொடுப்பாள் அவனை

கண்டால்துயிலைகொஞ்சம் கலைத்துவிலக்குவாளாம்
காமக்குறிப்பைக்காட்டி ஏமாந்துநிற்பாளாம்
அண்டையிலிருந்தாலும் அறியாப்போலிடிப்பாளாம்
அடுத்துப்பின்தொடர்ந்தாலும் கடுத்தாப்போலிருப்பாளாம்
சோர்ந்திடுவாளாம்—தலைவலிக்குதென்று
சார்ந்திடுவாளாம் யெதிரில்

225529

8-JAN

## மதிருஸ் ஆசைப்பாட்டு.

கலையைகளைந்துபோட்டு கிணற்றுக்குவருவாளாம்
காணாமல்வந்தாப்போல சடுக்கென்றுமறைவாளாம்
இலையிலேயவன்விட்ட எச்சிலைத்தின்பாளாம்
யெண்ணம்வருகும்படி பண்ணதந்திரத்தாலே...மதி

## கும்மி.

இத்தனை கோலம் வருகிற சண்டாளி
யென்னென்ன வித்தைகள் கற்றிருப்பாள்
சற்றுங்கணவன் சந்தேகப்படாமலே
சந்திரமதிபோல்நடந்துவாராள். 1

புருஷன்தொழிலுக்குபோகுமட்டும்யிவள்
பூமியைப்பார்த்து நிமிராளாம்
சிறுவன்வருகையைக் கண்டுவிட்டாலப்போ
சோலைக்கிளிபோல கொஞ்சுவாளாம் 2

பெண்ணாலேயெல்லாமுடியுமென்றுஐயா
முன்னோர்கள்சொன்ன பழமொழிபோல்
யெண்ணம்திரும்பா திருந்திட்டபிள்ளைக்கு
எப்படியோசுகம் தந்துவிட்டாள் 3

எப்படியோயிவள் யெண்ணந்திரும்பியே
யின்பசுகங்களைக்காட்டிவிட்டு
கைப்பிடிநாயகன் போலேயிருவரும்
ஒப்பிருந்தார் சிலகாலம் 4

அண்டையயலார் தெரிந்துவிட்டார்பின்னால்
கொண்டகணவன் தன்னைச் சிறிக்கலுற்றார்
கண்டுபிடித்தல்லோ கேட்கவேணுமென்று
முண்டைபோல்பேசாதிருந்துவிட்டான் 5

படுத்துயிருவருந்தூங்கையிலேயிவன்
பார்த்துப்பிடித்திடவேணுமென்று
கமேத்தமுகக்குறிகாட்டாமல்தினம்
கண்டுங்காணாமலிருந்துவிட்டான் 6

நித்தமொருநாளாய் போகுதையாயிவன்
நோய்ப்பிடிக்கவுங்கூடலையாம்
யெத்தனஞ்செய்தேயிருக்கையிலேயிவர்க்
கென்னவிதிவசம் நேர்ந்துதையா. 7

கொஞ்சிக்குலாவியே கட்டிலிலேயிவர்
கூடியிருக்கையில் கண்டுவிட்டான்
பஞ்சபூதங்கள் அஞ்சாமல் கிழவன்
பட்டாக்கத்திதயாருசெய்தான். 8

பட்டாக்கத்திதயாருசெய்தானிவரை
வெட்டியேபோடத்துணிந்துகொண்டான்
கட்டுசோர்கட்டடிகொஞ்சத்தூரத்திற்கு
சால்வழிபோகவேணுமென்றுசொன்னான். 9

பத்துநாளைக்குள்ளே வர்திடுவேன்பெண்ணே
பத்திரம்பையனைப்பார்த்துக்கொள்ளு
சித்தங்கலங்காதே நானில்லையென்றிதோ
சீக்கிரம்வாரேனென்றே நடந்தான். 10

## நொண்டிச் சிந்து.

கட்டுசாதங் கையிற்பிடித்தான் — இதற்குமுன்
கத்தியெடுத்தொருபுறம் பத்திரம்வைத்தான்
எட்டியிரண்டடிநடப்பான் — உடனே
எண்ணுதுமெண்ணிமனம் குன்னிடுவான்
கைகாலும் பதைபதைப்பான் — யிவர்
கழுத்தையறிவதெப்போ வென்றுநினைப்பான்
ஊர்வழி நடப்பவன்போல் — சீக்கிரம்
ஓங்கிநடப்பான் காலை வாங்கிநடப்பான்
பொழுதெப்போமறையுமென்று — ஐயா
பார்த்திருப்பான் முகம் வேர்த்திருப்பான்
அந்திப்பொழுதானவுடனே — துரிதமாய்
வந்தவழியேதிரும்பி நெருங்கிக்கொண்டான்
பேருவூருகாட்டாமல் — வீட்டிலே
படுத்துக்கொண்டானிருட்டில் ஒளித்துக்கொண்டான்— தங்கின

## விருத்தம்.

கிழவனையனுப்பிவிட்டேன் கேழ்ப்பவாருமில்லை
மகிழுடனென்னைச்சேரும் மன்மதாவாடாயென்றாள்
தழுவியேமுத்தமிட்டுத்தாராளமாகப்பேசி
விழவிழசிரித்துக்கொண்டு விளையபர்டியிருக்கின்றாளே

## நொண்டிச்சிந்து

கட்டியிருகப்பிடிப்பாள் — அவனை
கனிவாயால் முத்தமிட்டுக்கடித்திடுவாள்
தட்டிதுடையைக்கடிப்பாள் — திரும்பியுந்
தலையைக்குறுகிமடி மேல்படுப்பாள்
முகத்துடன் முகமணைப்பாள் — மோகமுடன்
முத்தங்கொடுத்தேயிருக்கி பிரண்டிடுவாள்
ஜகத்தினில் தேவர்முதலாய் — மனிதரும்
சீராயிருந்திட்டாரோ கேளடாயென்பாள்
பிரகஸ்பதி தேவன் மனைவி — தாரையவள்
பிள்ளைபோல் சந்திரனைப்புணரலியா
பிரமனும் யோக்கியனே — பெற்ற
பெண்முறையாம் ஊர்வசியைப்பிடிக்கலையா
துரோபதைபதிவிரதையொ — கருணன்மேல்
தொடுக்கலையா மனந்துடிக்கலையா
சீதைபதிகடக்கவியோ — வண்டோதரி
சேதியதுவும்சிலதறியாயா
கண்ணனது நடவடிக்கை — நீயே
காணுவிட்டாலுங்கதை கேழ்க்கலையா
உலகமிப்படியிருக்க — யிதற்குமுன்
யுகங்களுமிப்படியே நடந்திருக்க
நமக்குமாத்திரமென்னடா — நாலு
வேதசாஸ்திரமும் குறுக்கிடுமோ
பாவபுண்ணியமேது — மனம்போன
படியே நடவாவிட்டால் சுகமேது. (கட்டி)

## விருத்தம்.

உலகமதிலுத்தமிக னென்னைப்போல
ஒருவருமேயில்லையென்று பசப்பிக்கொண்டு
குலநலமும் முறவரையும் யெண்ணிடாமல்
கொண்டவனை ரெண்டேகஞ் செய்தகழுதை
பலசுலையுந்தெரிந்தாப்போல் கதைகள்சொல்லி
பையனையுங்காமுகனாய் செய்துவிட்டாய்
தலையுருளவெட்டுகிறேன் பொருமையென்று
தன்மனதிலெண்ணிமெள்ள நெருக்கினனே.

## கும்மி.

இவ்விதமாகவே கொஞ்சிக்குலாவி
யிருவரிருந்திடும்வேளையிலே
யெவ்விமனதுபொருக்காமல் கிழவன்
ஓங்கியேகத்தி யெடுத்துவந்தான் 11
நெஞ்சந்துடித்து பதைத்திடவே கண்கள்
நெருப்புப்பொரியும் பறந்திடவே
பஞ்சிபரப்பதைப்போலகிழவனும்
பத்தியெரிந்தல்லோ ஓடிவந்தான் 12
வனக்குமனவியாய் வந்தவளே யெந்தன்
பிள்ளைக்கு சுகத்தைத்தந்தவளே
உனக்கல்லோகத்தி வீசுகிறேனென்று
ஓங்கியொருவெட்டாய் போட்டுவிட்டான் 13
கத்தியெடுத்தவன் வீசயிலேயந்தக்
கண்டாரவோளிமறைந்துவிட்டாள்
பெற்றசுதனும் பிள்ளையின்கழுத்து
பளீரென்று ரெண்டாய் விழுந்துதையா 14
ரெண்டாய்ச்சிரசு விழுந்திடவும் மிந்த
முண்டம்விழுந்து புரண்டிடவும்
கண்டவிடமெல்லாம் ரத்தப்பிரவாகம்
கண்ணாலேகண்டுமயங்கிவிட்டான் 15
பிள்ளைகழுத்து விழுந்திடவேயந்த
பிர்மத்திசுத்தி மூழித்திடவே
கள்ளவிபசாரி அம்மணமாகத்தான்
கந்தையைச்சுற்றிக்கொண்டோடிவந்தாள் 16
கத்தியைக்கையில் பிடித்துக்கொண்டு இவன்
பித்தனைப்போலப் பிணத்திக்கொண்டு
சுத்துமுத்துமிந்தக் கழுதை எங்கேயென்று
சுணங்கன்போல யலையுகிறான். 17
குடிக்குயமனாய் வந்தமுண்டையிவள்
கூச்சலோ ஏழுறு கேட்டிமோம்
அழுதுபுரண்டுதெருவில் வரச்சனம்
ஆயிரமாயிரஞ் சேர்ந்திடுமாம். 18
அண்டையயலுள்ள ஆணும்பெண்ணும்புவி
ஆளும் கவர்ன்மெண்ட் சேவகரும்
முண்டையிவளிட்ட சத்தத்தாலே இனம்
மூலபலம்போலே சேர்ந்துவிட்டார் 19

225 529
சென்னை-600 008

வீதியடங்காத கூட்டங்கண்டு உயிர்
விட்டபிணம்போலே நின்றுவிட்டான்
ஓதிடவாயுந் திறக்கவில்லை கிளவன்
ஒன்றுமிலவாமல் மயங்கிவிட்டான் 20

கட்டிக்கிழவனைக் கொண்டுவந்தாருடன்
கட்டையுங்கூடவே கொட்டிவந்தார்
பிட்டர் ஜெயிலிலே போட்டடைத்தாரனை
கேசுகளாரம்பஞ்செய்தனராம் 21

மாண்டபிணத்தையுந் தூக்கிவிட்டாரிவனை
மாரிஜெயிலிலடைத்துவிட்டார்
ஆண்டவன்போலவே ஜட்ஜியெதிரிலே
அனியாயக்கேசை விளம்பலுற்றார் 22

சீராய்க்கிழவனுரைத்துவிட்டானிவன்
சித்ராங்கிபோல மறைத்துவிட்டான்
தாறுமாறெல்லாந் துரைகள் தெரிந்தவன்
தலையைவாங்கும்படி தீர்மானித்தார் 23

வைகாசிமாதம் இருபத்தெட்டாந்தேதி
வாரமேதிங்கட்கிழமையிலே
பையவே ஆறுமணிக்குள்ளேவாங்கிட
பார்லிமெண்டாரிடவுத்திரவாம் 24

உத்தரவுவரை பார்த்திருந்தவனை
பத்திரமாகவே காத்திருந்தார்
தெத்திவருகின்ற தந்தியின் மார்க்கமாய்
தூரத்துசேதியறிந்துகொண்டார் 25

சேதியைக்கண்டதுந் திங்கட்கிழமையின்
ஜூன்மாதம் ஒன்பதாந் தேதிகளில்
வாதிகளெல்லாஞ் சொல்லிவாய் மூடுமுன்
வாங்கிவிட்டார்களிவன் சிரசை 26

கிழவன் சிரசையும் வாங்கிவிட்டாரிந்தக்
கழுதையுங்கூடவே சிஷ்டைசெய்தார்
இழிவாந்தொழிலை புரிந்தல்லவோயிவர்க்
கித்தனை துன்பமும் நேர்ந்ததையா 27

தாயைப்புணர்ந்த கதையுரைத்துரெண்டு
தாள்வலிதிராதிருக்குமுன்னே
ஒருபாவியுடகதை வந்துதையா
அதைபாடி முடிக்கிறேன் நேசர்களே 28

பணத்தில்பெரியோனொருசீமான்
திருப்பாப்புலியூரிலரண்மனையாம்
குணத்தையுரைக்கவோர் பிள்ளையில்லாமலே
கோடான கோடி சிலவழித்தான் 29

முன்செய்த கர்மத்தினாலேயவருக்கு
முக்கண்ணன்பிள்ளையில்லாவிடுத்தும்
தன் ஆசைக்கோர்பிள்ளை தத்தவாங்கியே
தாவிவளர்த்து வருகையிலே 30

சேர்த்துவளர்த்துக் கலைதீர்த்து நல்ல
சித்திரம்போலவே சீராட்டி
பார்த்திபன்போலே வளர்த்து வருகையில்
பத்தினிக்கோர்பிள்ளை தோன்றினதாம். 31

தத்தெடுத்தப்பிள்ளை சீராய்வளர்ந்தபின்
தனக்கொருபிள்ளை பிறந்ததினால்
பெற்றமகன் தன்னை கொஞ்சிவளர்ப்பதை
பெரியபிள்ளையதை யறிந்தானும், 32

தன்னைமறந்து யிருப்பதுவும் அவர்
தங்கள்மகனைவளர்ப்பதுவும்
யெண்ணிபலவாருய் மனஞ்சலித்து ஒரு
யெத்தனம் செய்தானும் நேசர்களே. 33

## நொண்டிச்சிந்து.

பிள்ளையில்லாததினால்—நம்மை பிரியமுடனிதுவரை வளர்த்துவந்தார்,
ள்ளபொருள் பூஸ்தியும்—அப்பா உனக்கேயளிப்பேனென்று செப்பிவந்
ார், தனக்கொரு பிள்ளைபெறவே—லேரெண்ணம் தரித்துக்கொண்டார்
ம்மை வெறுக்கலுற்ருர், இனியிந்தபிள்ளையை வைத்தால்—நமக்கு எவ்வள
ங்கிட்டாது என்று துணிந்து வெட்டிவிட கத்தியெடுத்து சகோதரனை—
வுதக்கைகள் காட்டிமெத்தை மேலழைத்து, அன்பானவார்த்தையுரைத்து
மெத்தைமேல் அழைத்துமேயொருபுரம் தனியேவைத்து, கத்தியையெடுத்
ணே சிரிப்புகள் காட்டிக்கொண்டே ஒருவெட்டாய் வீசியெறிந்தான்,
கயிரண்டும் வெட்டித்துணித்தான்—அந்த காப்புக்கொலுசுரெண்டும் உரு
க்கொண்டான், ஆருக்குமகப்படாமல்— மாது அரண்மனைநாடி சீக்கிரம்
டந்தான், பின்னொரு நாழிகைகடந்து—பெற்ற பிள்ளைதனைக்காணேனென்
வீடுமுழுதும், அன்னையுந்தகப்பனிருவர்—அடா அப்பா மகனேயென்று
ழைத்துகொண்டு. மெத்தைபடி யேறிப்பார்த்தார்—அங்கே மழைபொழி
கதுபோல் உதிரங்கண்டார் கைவேறு கால்வேறு— தலைவேறு கரும்பு
பால் உடல்வேறு புரளக்கண்டார். அவர்படுந்துயரமதை- ஆதிசேஷனும்
சால்லியழத்தாமல்லவே.
தந்திஞர

## கும்மி

பிள்ளையிருந்த அதிசயத்தைக்கண்டு
பெரிய மகனையுந்தேடுகையில்
கள்ளமில்லாமலே காணேனென்றேயவர்
கலங்கியழுதுமே தேடலுற்ருர் 34

தாயுந்தகப்பனுந் தேடிக்கொண்டவனை
தரணியெங்குமே அலையலுற்ருர்
கூலியேபந்துக்கள் வேறொருவழியாய்
மனக்குமிங்கிமிகவும் அழுகையிலே. 35

பிரின்சிகவர்னர் ஆழுமந்தடவுன்
புதுச்சேரிபட்டணந்தன்னிலொரு
ஓதியஞ்சாலையென்னுந்தெருவில்
அவனை ஒடியேகண்டுபிடிக்கலுற்ருர் 36

திரேகமுழுவதும் ரத்தக்குறிகளும்
திருடிக்கொண்டோடிய சொத்துகளும்
ஆறுமேசாட்சிகள் வேண்டாமல் அவனுக்
கதுவே திஷ்டாந்த மாச்சுதையா, 37

கட்டியேஜட்ஜியெதிரில் விட்டாரிவன்
கையிலுள்ளசொத்தும் முன்னேவைததார்
பட்டகதையெல்லாம் கேட்டுவிட்டுயிந்த
பாவியைத்தூக்கிலேயேத்துமென்றார் 38

சொல்லிவாய்ஜட்ஜியும் மூடுமுன்னேவுடன்
சூழ்ந்துகொண்டாரெமதூதரைப்போல்
கொல்லத்துணிந்து கொலைசெய்தபாவியை
கூசாமல் தூக்கிலேமாட்டிவிட்டார் 39

பிள்ளையைத்தாயார் புணர்ந்தகதையதின்
பின்னாலேதம்பியை கொன்றகதை
விள்ளப்போனாலின்னம் வேணதுண்டுவிட
மில்லாமல்விட்டேன் ஜெகத்தாரே 40

பாவிகளின்கதை தீர்ந்ததையா அதை
பாடியேவாய்கூட நொந்ததையா
கூவிசிலபுத்தி சொல்லுகிறேனதை
கொண்டணைக்கவேணும் நேசர்களே 41

துரோகத்தொழிலை நடத்தவேண்டாமிந்த
துன்பத்துக்குயிடம் வைக்கவேண்டாம்
திரேகமேநீரின் குமிழாகும்வீண்
தோஷந்தொடாதீர்கள் நேசர்களே 42

மாதுமேமையலைக்கொண்டல்லவாலங்கை
மன்னனழிந்ததுங்கேள்க்கலியா
தோதகமாயை நீக்கிவிட்டுநல்ல
சுகத்தைதேடுங்கள் நேசர்களே 43

காமம்யெவருக்கும் யெமனையாகரை
கண்டவராருமேயிலையையா
பூமியில்வல்லவனென்றுபேர்கொள்ளும்
புத்தியைத்தேடுங்கள் நேசர்களே 44

பெண்ணாலே இந்திரன் புண்ணானான்பால
சந்திரன்தேகமும் பின்னமானான்
எண்ணக்கணக்குண்டோ பெண்ணாலே
கெட்டவரெத்தனைகோடியோ நேசர்களே 45

அருமையறியா மூட்டுக்காலவிது
கர்மியைப்போற்றுந் திருட்டுக்காலம்
திருமணலூா முனுசாமி சொல்வாக்கியம்
சோதித்துப்பார் கலிகால குணம். 46

தூக்குப்பாட்டு முற்றிற்று.

---

சாமிதாசன்பாடிய
பரமசிவன் மீது பக்திரசக்கீர்த்தனையும் இராகவன் பத்தினியாகிய
சீதையம்பாள் அலங்காரமும் அச்சிலிருக்கிறது
கூடிய சீக்கிரம் வெளிவரும்.

காப்பக நூலகம்
225529